
நாம் யார்?
பூஜ்யஸ்ரீ சத்குரு
தூளி பாபா



# நாம் யார்?


**வெளியீடு :**
**அன்பின் குடில்,**
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
**கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,**
பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
**தொலைபேசி : (04256) 227655**
**மின் அஞ்சல் : anbinkudil@yahoo.co.in**

முதற்பதிப்பு : குரு பூர்ணிமா, 2013

பிரதிகள் : 500

அட்டைப்படம் : வட துருவம் - சூரிய அஸ்தமனம்

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025



(சத்திய வாக்கு)

சத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"சத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

# நான் யார்? அவ்வி!

# அவ்வி!! நாம் யார்?

(ஞானச் செல்வங்களே)!

ஸ்ரீ மஹான்களெல்லாம்! தன்னை அறியும் அறிவை, சிறப்பித்துக் கூறி, ஞான விசாரணை, செய்யுங்கள் என்றார்கள்.

அந்த ஞான விசாரணையாவது, நான் யார்? என்று விசாரணை செய்வதா? நாம் யார்? என்று விசாரணை செய்வதா? என முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். நான்! என்றால் ஒருவன். நாம் என்றால் இருவரையும், பலரையும், குறிக்கும். ஆனால் இங்கு இவ்விசாரணையின் நிமித்தம், நாம் என்பது இருவரை மட்டும் குறிக்கிறது என வைத்துக் கொள்வோம். (பரமாத்மா & ஜீவாத்மா)



நாம் என்ற சொல்லானது உ
பரமாத்மா & ஜீவாத்மா!
என ஈசனையும்! ஜீவனையும்!
குறிப்பதாக அமைகிறது.
ஸ்ரீபகவானையும் நம்மோடு
சேர்த்துக் கொள்வதால் வினையின் குணதோஷம்
நாசமாகிறது என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

இனி விசாரணையை ஆரம்பிக்கலாம்.

நான் என்பது அஹங்காரம்! ஆதிக்கம்! அதிகாரம்! இவைகளின் அடிப்படை வார்த்தைகளாகும். எனது! என்பது உடைமைகளை உரிமை பாராட்டுவதும்; மானம்! அவமானம்! வெட்கம்! லஜ்ஜை! கூச்சம்! தன்மானம்! போன்ற அபிமானத்தைக் குறிக்கும்.

இந்த நான் என்ற வார்த்தையானது, இக்கலியில் வந்ததாகும். முந்தைய யுகங்களிலெல்லாம் நாம்! யாம்! என்றுதான் பேசி வந்தார்கள். இங்கு யாம் என்பதும் ஒருமையைக் குறிக்கும் வார்த்தையாகும். இங்கு ஆதி ஸ்ரீமஹான்களெல்லாம் நாம் என பேசுபவன் பக்தன்! என்றும் யாம் என பேசுபவன் ஞானி என்றும் சொல்வர்.



யாம்! என்பது
ஓர் நிலையில்
ஒர்மையாகவும்
மற்றோர் நிலையில் மனித
இனம் உட்பட 84 லட்சம்
ஜீவகோடிகளையும் இணைத்த
நிலையில் சர்வ சாட்சி பாவனையை குறிக்கவும்,
என ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேள்வி.

இங்கு யாம் என்றால், யாம் — எம்மை!
என்ற நிலையில்; எல்லாம் — அனைத்தும்!
என்ற அர்த்த பாவனையை குறிக்கும் என்றார்கள்.
ஆகவே இங்கு நான் என்று வரும்
அஹங்காரத்தை/நாசம் செய்ய வேண்டும்.
ஏன் என்றால் அஞ்ஞானத்தின் ஆணி வேர்!
நான்/என்பதாகும். எனது என உடைமை —
உரிமை/ பாராட்டுவது அஞ்ஞானம் வளர
இடும் உரமாகும். ஆகவே இவ்விரண்டையும்
வேரோடும் தூரோடும், நாசம் செய்வது,
ஞானம் — பக்தியின் முதல் படியாகும்.
ஒருவன் உடைமையை ஸ்ரீபகவானுடையதை
என்னுடைமை (எனது) எனப் பாராட்டுவதும்,




நான்:- காட்சி (4)
பாவனை என்றும்,
நாம் சாட்சியாவனே
என்றும், யாம் சரிய
சாட்சியாவனே என்றும்,
உணர்வால் தெளிக, உணர்க, ஆகுக.

மனமடமையாகும். ஆகவே நான் / எனதும் /
சத்ருவை ஆகி விட்டது. நான் என்பது
அஹங்காரம் என தெளிவாகத் தெரிந்தபின் /
நான் என்பதை விசாரணை செய்யத் தேவையில்லை.
நாம் என்பதையே விசாரணை செய்யவேண்டும்.


அப்படியானால் **நாம் யார்?**

நாம் தேவனா? ஈசனா? ஜீவனா? ஆணா?
பெண்ணா? 84 லக்ஷம் ஜீவகோடிகளில் /
ஏதேனும் ஒன்றா? பஞ்சப் பிராணனா?
பஞ்சகோசமா? ஞானேந்திரியமா?
கர்மேந்திரியமா? மனமா? புத்தியா?





சித்தமா? கண்களில் தோற்றும் நாம
ரூபங்களில் ஏதேனும் ஒன்று?
கோடானுகோடி கோள்களும்! அண்டங்களும்!
சூர்ய சந்திராதிகளும்! ஆதிய இவைகளில்
ஏதேனும் ஒன்று? யோகக்ஷேவோதமாயாவா?
சரம்! அசரமா? க்ஷரம்! அக்ஷரமா?
ஜடமா? அவித்தையா? வித்தையா?
இவை அனைத்திற்கும் ஆதாரமான!
ஓம் என்ற பிரணவமா? என அறிவுபூர்வமாக
புத்திபூர்வ கற்பனை இல்லை!!
பாவனை நிலையில்! கருத்தூன்றி விசாரித்தால்



6

இவை ஒன்றும்! **நாம்** அவ்வளவு தெளிவாகும்

பின்னர் **நாம் யார்??**

முன்பு கூறிய அனைத்திற்கும்!!!

அதிஷ்டான ஆதாரமாகவும்!

சொல்லவொண்ணா! விளக்கவொண்ணா!

ஓர் மாபெரும் **சக்தி** ஒன்று உள்ளதென்று

ஆதிஸ்ரீமஹான்களின் வாயிலாக அறிகிறோம்.

அதை அகண்ட பவர் ஸ்டேஷன் என்றும்;

" அகண்டப் பேரொளி " ;

" அகண்டானந்த சமுத்திரம் " ;

அகண்டப்பாவனமணி " ;

ஸ்ரீமஹான்கள் கூறுவர்.



பரப்பிரம்மம்! 7
பிரம்மம்!
பராசொரூபம்! பரா
பரம்! பரஞ்ஜோதி!
பரிபூரணம்! அகண்டம்!
என்றும்; இன்னமும்
அநேக விதமாக அந்த ஒன்றை சொல்வர்.

அதை பரசொரூபம் என்றும்; பிரம்மம் என்றும்,
பரிமேலோன்தன் அழைப்பர். அதுவும் உபசார
வசனமேயன்றி உண்மையல்ல. அது
செயலற்றதே. செயல்படும் நிலைக்கும்;
செயல்படுத்தும் நிலைக்கும்! மாயாசூழ்மணம்!
என தம்மிடமிருந்து பிரித்துக் கொண்டது.
அதுவே மற்றொன்று போல் பிரகாசிக்கவும் நினைவில்
தம்மை ஓர் இறைவன் என ஆக்கிக்கொண்டது.
அவ்விறைவன் விளையாடும் நிமித்தம்
தம்மைத்தாமே பரமாத்மா ஜீவாத்மா! என
இரண்டாக்கிக் கொண்டும்; வாழ்மை விளையாட்டு




அது!

8

இயங்காத! இயங்க இயலாத தன்மையால் இறைவனை (ஸ்ரீ பகவானை) உண்டு பண்ண, மாயா மனம் என்னும் இரண்டை வைத்துக் கொண்டு பதுமை விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கிறது.

விளையாடிக் கொண்டிருக்கிறது. பரமாத்மாவும் ஜீவாத்மாவும்! அண்ண தம்பிகளாகும். அண்ண மாயாவை வைத்து விளையாடுகிறான். தம்பி மனதை " " . அண்ணவானவன் நாம்! எமது! என்றும் யாம்! எமது! என்றும் விளையாடுவதால் பந்தமில்லை. தம்பியானவன் நான்! என்னால்! எனது! என விளையாடியதால் ஜீவபந்தம் ஏற்பட்டுவிட்டது. இச் ஜீவபந்தத்தால் புண்ணியபாவமும் ஜனனமரணமும் தம்பியைத் தொடர்கிறது. இத்தம்பியானவன்



9

# நான் என்னுடைய எனது

என இம் மூன்றையும் நாசம் செய்தால் போதும்.

அஹங்காரம் / அதிகாரம் / ஆதிக்கம் / அபிமானம் /

ஆகிய எல்லாம் சர்வநாசமாகி விடும் என அறி.

இந்த நம்பியின் சாதனை.

1. மேலே சொன்ன மூன்றையும் நாசம் செய்கவ்.
2. வியாபாரம் / விளம்பரம் / ஆடம்பரம் / நாசம் செய்கவ்.
3. முற்கவனம் / தற்பெருமை / தற்காப்பு / ,, ,,
4. குற்றம் குறை / பேதம் / விருப்பு வெறுப்பு / ,, ,,
5. பொறுமை / பணிவு / மன்னித்தல் / இவை ஏற்றல்.
6. சர்வார்ப்பணம் ஆரம்பம் / பிரம்மார்ப்பணம் முடிவு!!

நம்பிக்கை வைராக்கியமுடன் கடைப்பிடிக்கவ்.



இதில் கூறிய 6 (10) சாதனைகளையும் செய்து முடிப்பதற்குள் தம்பியானவன் வளர்ந்து பெரியவனாகி அண்ணா ஆகி பின் பிரம்மார்ப்பணத்தால் காலாதீத பரமாகிய பிரம்மமாகி விடுவான்.

இந்த 6 சாதனைகளை மட்டும் செய்தால் போதும்.

ஜீவ பந்தம் அதாவது மனத்திரை சர்வநாசமாகும்.

இந்நிலையில் தம்பி! அண்ணா! ஆகிவிடுவான்.

அதாவது ஜீவாத்மா! பரமாத்மா! ".

இதன் ரகஸ்யம் என்னவென்றால்?

(1) எந்த நாமரூபம் ஆனாலும்; எவ்வா நாமரூபங்களையும்! இல்லை இல்லை இல்லை இல்லவேஇல்லை யென அறிவு பூர்வமாக உறுதிநிச்சயம் செய்க.

பின் அவைகள் ஏது என்றால்:- ஜடசொரூபமான பரமாணுக்களின் இணைப்பும் பிணைப்பும் ஆனவை உணர்.

ஜீவசொரூபமாக இருந்தால் (மனிதனும் உட்பட



(1) ஜடசொரூபம் பரமாணுக்கள் என்றும், ஜீவசொரூபம் ஜீவாணுக்கள் என்றும், சூறம்பட்டதில் ஜீவாணு செயலற்று ஜடமாகிவிட்டால் அதுவும் பரமாணுக்களே.

ஜீவாணுக்களின் இணைப்பும்/பிரிவும்! என உறுதிநிச்சயம் செய். அணுக்கள் என்றால்


ஆத்மா/ என உறுதிநிச்சயம் செய்.

நாமரூபம் தோன்றுவது மனதால் என அறிக.

அணு என்ற ஆன்மாவாக உணர்வது அறிவாகும்.

(உ) நாமரூபம் தோன்றும் போது அசைவு என்ற, இயக்கம் தோன்றியே தீரும். இயக்கம் தோன்றும் போது குணம் அவசியம் வந்தே தீரும். குணம் வந்தால் புண்ணிய பாவம் வந்தே தீரும் என அறிக.

புண்ணிய பாவம் வந்தால் ஜனனமரணம் அவசியம் உண்டு என அறிக.



பரமாணுக்கள் (12)
பரமாத்ம சொரூபம்
என்றும்; ஜீவாணுக்கள்
ஜீவாத்ம சொரூபம் என்றும்
பொருள் கொள்ள வேண்டும்.

ஆனால் பெரிய / சிறிய / என்றே பேதமே
தவிர இரண்டில் பேதமில்லை.

இப்படித் தொடர்ச்சியாக சங்கிலித் தொடர்களை
பந்தம் சூழ்வதால் நாமரூபத்தையே சர்வநாசம்
செய்வாயாக. நாமரூபத்தை நாசம் செய்வது;

ஆரம்பம் :- பொம்மைகள் & பொம்மலாட்டம்.

முடிவு :- பொம்மைகள் மண்ணானதே. எல்லாம் மண்ணே
மண்ணே எல்லாம் எனக் காணமுடியாது உணர வேண்டும்.

(3) எல்லா சப்தங்களையும் / வாக்கின் ஒலிகளையும்
அர்த்தம் & அனர்த்தம் / எனப் பிரிக்காமல்;
எல்லாம் நாதப் பிரம்மத்தின் / ஓம் காரத்தின்
ஒலிகளே / என பொறுமையுடன் சகித்தல் வேண்டும்.



அது அமைதியானது
அதிகம் ஆர்க்க கூட. ஓ அது கிடைக்காது.

## நான்

சாமான்யன் அல்ல.
ஒரு பக்தன், ஒரு ஞானி,
என்னால் முடிந்தது, முடியும்,
நான் நான் சாதித்தேன். நான் ஓர் ஜீவன் முக்தன்
என ஜீவ கர்த்தவத்தோடு கூறும் வார்த்தைகள்
எதுவாயினும்

(பாஷைகள் புரியவில்லையானால் எப்படி
மௌனமாக இருந்துகொண்டு சாந்தி அடைதல் போல்)
வார்த்தைகளில் சாந்தி ஆகுதல் வேண்டும்.
இப்படியாக உன்னை வெளியே
வெளிப்படாமல் உள்ளேயே அதிக வலிமையுடன்
உள்ளேயே ஈர்க்க வேண்டும். இதனால்
தற் கவனம் பெருகும்.

## நாம்

சாமான்யன் அல்ல.
ஜீவனும் அல்ல.
தேவனுமல்ல.
ஈசனும் அல்ல.
ஆணும் பெண்ணுமல்ல.
எந்த நாமரூபமுமல்ல.

ஆரம்பம் இறைவனின் குழந்தையே.
மத்தியில் இறைவனேயாம் / நாமே இறைவன்.
முடிவில் காவாதீதபரமேயாம். நாமே அது / அதுவேயாம்!





ஓர் நிலையில்! உ மனமே! நான்! ஆகும் என அறிக.

இங்கு நாம்! எனச் சொல்வதாலும்! ஏற்றுக் கொள்வதாலும்! ஸ்ரீபகவானையும் நம்முடன்! இணைத்து, பிணைத்துக் கொள்கிறோம் என உணர்க. அவன் நாமாவைச் சொல்லி, அவன் பொருளை நாம் அனுபவிப்பதால், நாமரூப குணதோஷம்! நம்மை பற்றுது என ஸத்தியமாய் உணர வேண்டும்.

நான்! எனச் சொல்லி அனுபவிக்கும் போது, அஹங்கார நிலையில் நம் மனமே! முழு பொறுப்பையும் ஏற்றுக் கொள்வதால், நாம ரூப, குணதோஷம் இம்மனதையே சேரும் என உணர்க.



ஓர் நிலையில் 15

கலியின் நாண்

இயக்கம் சி இருப்பு ஆகும் என அறிக

அங்கு நாம் என்பதால் சகல பொறுப்புகளையும்
அவனே ஏற்றுக்கொள்கிறான். ஏற்றே ஆக வேண்டும்.

காரணம்?

உலகே அவன் படைப்பு. உலக இயக்கமோ
அவன் இயக்கம். அவனன்றி அணுவும் அசையாது
என்பது சத்தியமே. அவன் பொருளே நான்!
என்னுடையது! எனச் சொல்லி அனுபவிப்பது
மஹாபாபமாகும்.
எல்லாம் அவன் செயல்! என வாயாரச் சொல்
லிவிடுகிறீர்களே? அதை மனமாற!
மனமாற அனுபவம் ஆகவேண்டாமா??



# நாம் யார்! 16

ஒரு பக்தனை ஞானியே
எனக்குறும் எந்த வார்த்தைகளும்
அஹங்கார, ஆதிக்க, அதிகாரமில்ல

இது **அறிவின்!** வாக்காகும். ஜீவ
கர்த்ருத்வம் இல்லவே
இல்லை

எம்பொருளை தொடாதே எனவா அவன் சொல்கிறு

உனக்காகவே எம்மால் சிருஷ்டிக்கப்பட்டது!

தொழுந்தே. அப்பொருளை தொடும் போதும்;

கொடுக்கல் வாங்கல் பண்ணும் போதும்;

உண்டு அனுபவிக்கும் போதும்; ஏனது!

என உடைமை & உரிமை! பாராட்டாமல்

எம் நாமத்தைச் சொல்லி; எல்லாம் நீயே!

எல்லாம் உனதே! என்ற பாவனையில்!

நன்றாக விளையாடலாமே? எனத்தானே அவன்
சொல்கிறான்.

இதில் என்ன வருத்தம்? கஷ்டம்? என உணர்க.



அறியாமையினால் **நான்** என்றும் அறிவினால் **யாம்** **நாம்** எனக்கூறும் நீ உண்மையிலே இதயத்தையே தட்டித் தட்டி

அவனுடைமையாக பாவனை!

பண்ணி நீ விளையாடும்போது, இன்ப துன்ப

புண்ணியபாவம்! உன்னை தீண்டாதொழியும்.


ஏக குணமாகிய! ஸத்வ குணம்!

உன்னை அரவணைத்துக்கொள்ளும். அந்நிலையில்

நீ! ஸ்ரீ பகவத் குணானுபவத்தை!

பெற்று மகிழ்வாய். இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!

ஸ்ரீ பகவத் சொருபமல்ல. ஸ்ரீ பகவத் குணானுபவம் ஆகும்.



சுட்டிக்காட்டு 18
கிருஷ்ம். அறிந்தோ
அறியாமலோ உன்னை
மார்பைத்தான் சுட்டிக்
காட்டுகிறது. அதுதான்
உன் இதயம்தான் } உன்னுடைய
ஆவயமாகும் — என்பது தெரியவருகிறது.
பின் சந்தேக கவசத்பயம் ஏன். அதுவே நானென உறுதிபண்ணு.

அவன் சொரூபம் மாயா! உனக்கு அது வேண்டாம்.

அவனுடைய ஏகருணையாகிய ஸத்வ குணம்!

குணாதீத நிர்க்குணத்தின்! அஸ்திவாரமாகும்.

பிரம்மாண்ம பாவனைக்கு நீ செல்லும் போது

அதுவும் நாசமாகிவிடும். ஆன்ம பாவனை!

ஒன்றே மிஞ்சும் எனஅறிக.

நான்

எனச் சொல்வதும்! செய்வதும்!
ஜீவ கர்த்ருத்வம் ஆகும்.
" அஹங்காரம் " .
பிறவியின் ஆணிவேர் " .
ஜீவ பாப கர்மா " .
நான் ஆன்மா இல்லை என்றும்,
" சாமான்ய ஜீவனே என்பதாகும்.



19

தேனின் மதுரம் போலும் நாம ரூபத்தினுள் இயங்கும் இயக்கும் சக்தியாய் யாமரிய நாம் இருக்கிறோம். மனக்கண்ணுக்கு நாமரூபம் தோற்றுகிறது. அறிவுக்கண்ணுக்கு சூட்சமமான உண்மை உள்ளபடி உணர முடியும்.

தன்னை ஓர் ஜீவனாகவும் / அஹங்கார கர்த்தாவாகவும் கற்பனை செய்யும் **நான்** / என்பதை விசாரணை செய்வதில் பயனும் அர்த்தமும் இல்லை.

**நான்** / என்பது **ஏது** / எனத் தெரிந்து கொண்ட தன்மையால் **நான் யார்?** விசாரணை தேவையில்லை. அது காலவிரயமே.

ஆனால்? **நாம் யார்?** விசாரணை / அவசியம் தேவையென உணர்க.



ஸ்ரீ பகவானே நாம் என்றால் :-
ஸ்ரீ பகவத் சொரூபமல்ல.
ஸ்ரீ பகவத் குண அனுபவமாகும்.

20

நாம ரூபமோ !
ரூப நாமமோ ! எமக்குத் தேவையில்லை என உணர்க.

நாம் / சாமான்ய ஜீவன் / அல்ல.

” விளக்க நிலையில் ஸ்ரீ பகவானின் குழந்தையே. இருப்பு நிலையில் :

” ஸ்ரீ பகவானே / உன் உபாசனை மூர்த்தி எதுவோ அதுவே

” பரிபூரண நிலையில் / காவாதீத

அகண்ட ப...ர...மு...ம் !!!
கண்ட அளவில் ஆத்மாவும்
ஆவோம். இது ஸத்தியம் ! ஸத்தியம் ! ஸத்தியம் !!!



21

உ நாமரூப பொருள்களே நான்! எனது! என உடைமை & உரிமையை பாராட்டும் போது புண்ணிய பாப வினையும்! அதனால் ஜனன மரணமும் தொடரும் என்பது ஸத்தியம்.

கண்! காது! மூக்கு! வாய்! கை! கால்!
பேனா! பர்ஸ்! மூக்கு கண்ணாடி! திருவடி! குடை!
இவைகளே **உடைமையாகு!**

உடைய உன்னைப் பார்த்து, இவைகளில் ஏதேனும் ஒன்றை சுட்டிக்காட்டி, இது யாருடையது என கேட்டால்? என்ன பதில் சொல்வாய்???

**எம்முடையது!** என்று தான் கூறுவாய்.

அப்படியானால், எம்முடையது என கூறும் **நீ!**
அப்பொருள்களல்ல என்பது ஸத்தியமே.

அப்பொருள்கள் எல்லாம் உன் உடைமையானால் **நீ** யார்?



ஓ நாமரூப பொருள் ஓம் கள் எல்லாமே

எல்லாம் உனதே! என

சர்வ ஸங்க பரித்தியாகம்!

செய்யும் போது, நாமரூபம் இயல்பாகவே

பொம்மை & பொம்மலாட்டமாக மாறிவிடும்.

உடலின் எந்த உறுப்புகளும் (உள்ளே & வெளியே) நீ அல்ல என்பது ஸத்தியமானால்,

நீ யார்? உன் இதய

குகையில் ஸ்வயமாக ஒளிரும்

சுடரே/ஒளி சைதன்யமே/டை ஆன்மாவே


காணக்கூடியதல்ல. ஆனால் உணரக்கூடியது.

காண்பது தூலம்! உணர்வது சூட்சுமம்.

அதுமாறும் மறையும் ஸத்தியமாய் நாம் பெற்றது.

நான் அல்ல. நாம் அல்லது யாம் ஆவோம்.

என ஸத்தியமாய் உணர்வாயாக.



நீயும் யானும்! கணாகாண். **23**

தேனும் பாலும் போல் சிவம் என்றார்கள்.

தேன் என்ற நாம ரூபத்தினுள் மதுரம் என்ற சுவை (பரம்) நிறைந்திருப்பது போலும், பால் போன்ற பரத்தினுள் ஜீவம் போன்று நாம ரூப ஜகஜீவ

அந்த நாமாகிய யாம்! எப்படி இருக்கிறோம் என்றால்?

# தேனின் மதுரம் போல்

தேன் **நாமரூபம்** | மதுரம் என்ற சுவை ← **பரம்**

தேனைக் காணலாம். சுவையைக் காணமுடியுமா? பிரம்மம்

சூட்சும ரகசியமாய் இருக்கிறோம்.

# மனதுடையோர்

(நாமரூபத்தை) காண்பர்.

# அறிவுடையோர்

மட்டும் சுவைத்து உணர்வர் என அறிக.



சொரூபங்கள் எப்படி மறைந்திருக்கிறதோ அப்படி பார்க்காமல் இருக்கிறோம். உள்ளே மறைந்திருக்கும் ஜீவத்தை காண முடியவில்லை

24

தேனைக் காண்கின்றோம். தேனிலுள்ள மதுரத்தை காண முடிவதில்லை.

மனம் காண்பதனால், தோஷ குணம் சேர்ந்து அதனால் வாதி தொடரும்

அறிவு சுவைத்து உணர்வதால் மனந்திரை நாசமாகும்

வாய் ஞானமில்லா, அனுபவ ஞானம் வரும்.

மனம் காண்பதின் மயக்கமானது உறை ஓடாது தடுக்கும்.

ஒவ்வொரு நாம ரூபங்களிலும் ! அசையும் அசைக்கும் நிலையில் பகவான் இருக்கின்றான் என்றும்

அசையாத அசைக்கா நிலையில் பரமே இருக்கிறது என்று உறை வேண்டும்

உணர்ச்சி கெட்டால் உணர்வு மேலோங்கும்.



பால் என்று பரத்தில் ஜலம் என்று நாமரூப ஜகஜீவ தோற்றம் மறைந்திருக்கிறது. தேன் என்று நாமரூப ஜக ஜீவ தோற்றத்தில் சுவையென்று பரம்பொருள் மறைந்திருக்கிறது. அதாவது கல் தோன்றினால் நாய் தோன்றாது. நாய் தோன்றினால் கல் தோன்றாது. நாமரூபத்தை தள்ளி பரத்தில் ஒன்றுவாயாக.

25

இந்த ஸ்வயமான **ஆத்மாவை உணர**/முடியும். உணர்பவரே உவமானத்தால் அவ்வுணர்வை ஒருவர்க்கு உணர்த்த முடியும். காண முடியாது. காட்ட முடியாது. காண்பது மனம்! உணர்வது அறிவு. காண்பவன் உணர முடியாது. உணர்பவன் காண முடியாது. காண்பவன் உலகில் இன்பத்தை அனுபவிப்பான். உணர்பவன் "ஆனந்தம்". ஆனந்தம் என்பது **நாமரூப**/ மயக்கம் கலக்கம் பயமற்ற நிலையாகும்.



அறிவின் சூட்சுமம் 26

நிலையால் இறைவனை அவன் உண்டு என உறுதி நிச்சயம் நம்பிக்கையால் ரூபம். கண் காணாவிட்டாலும், உணர்வு நிலையால் அறிவு நம்பும் எனவுணர்க.

இன்பத்தை/பல நிலைகளில், வாக்காலும்! வரியாலும், விளக்க முடியும். அது அழிவனையாம்.

ஆனந்தத்தை வாக்காலோ வரியாலோ விளக்க முடியாது. பசித்தவன்/சுவை உணர்வது போல்) வையை உணரலாம். ஓர் உதாரணம்.

காமகாஞ்சனா! ஆசைகளை நாசம் செய்தவனை ரசித்தவனுவான். அவை! நாசமாகும் ஒரே வழி: சர்வார்ப்பணமாகும்.

சர்வார்ப்பணம் தான் செய்கிறோமே என கேள்வி எழலாம் ???



நாமரூபம் என்று 27

மனம் குணம்

தோஷமாக அமைவதால்

நாமரூபம் அல்லாத மனம்

நம்பாது. துவக்காட்சி

யிவேயேமனம்

வயாபகதால் உலகை உண்மை என மனம் நம்பி

ரமிக்கிறதை உணர்க,

சர்வார்ப்பணம் செய்கிறோம் என்பது ஸத்தியமே.

(வாய் நாணமாக இருக்கிறது)

ஆனால்? நாமரூப மயக்கம்!

களங்கம்/கலக்கம்! பயம்! இன்னும்


முழுமையாக நாசமாகவில்லையே என்பதை;

யாம் ஒருவனே அறிவோம். அது நாசம்!

ஆவதற்குரிய வழியைத்தான் யாம்

செய்து கொண்டிருக்கிறோம்.

சந்தேகம் பயத்தை விடுக. இது ஸத்தியம்.



28

தேன் என்ற நாம ரூபம் இல்லாமல் தேன் சுவை என்ற பிரம்மானந்தத்தை சுவைக்க முடியாது. நான் எனதாக சுவைத் தானே அது இன்ப துன்ப இணைமையாக வடிவெடுத்து பிறவிச் சுழியில் சிக்க வைக்கிறது.

**தேன்!** :- நாமரூபம் ஆகும்.

**சுவை!** :- பிரம்மம் ,, .

தேனைக் காணலாம். சுவையைக் காண முடியாது.

ஆனால் உணரலாம். காண்பது **மனம்!**

உணர்வது **அறிவு!** என அறிக.

இதில் ஓர் ரகசியம் என்னவென்றால்?

நாமரூபத்தை **நான் எனதாக** கண்டால் இன்பமும் துன்பமும்!

**இயல்பாகவே!** உண்டாகிவிடும்.



ஓ 29

எல்லாம் நீயே!
,, உன்னுள்!
,, உனதே!
என்றறிவியால் நாம் ஏமதாக உணர்ந்து
புசித்தால் அகந்துன்பம் நாசமாக இயல்பாக
ஆத்மானந்தம்! உண்டாகும்.

நாமரூபத்தை நாம் ஏமதாக!

எல்லாம் நீயே! எல்லாம் உன்னுள்! எல்லாம் உனதே! என

இறைகுரு! உணர்வோம் உணர்ந்தால்

இருமை நாசமாகி, ஒருமையாகிய நமது

ஸ்வய ஆனந்தம்! எந்த

பயிற்சி முயற்சி! இல்லாமல் நாமரூப!

உணர்ச்சிகள் நாசமாகி, மெய்யுணர்வு மேலோங்கி,

நாம் ஆத்மாவே! என உணர முடியும். இது ஸத்யம்.

இதுவே நாம் யார்? விசாரணையின் நிறைவாகும்.

இருப்பது ஒன்றே நடப்பது நவமே.

த ஓ பாபா.



உ

# சுருக்கம்!

இந்த நாமரூப உலகமே அணுக்களின்! பிணைப்பும் இணைப்புமாகும்.

ஜீவாணு! ஜீவாத்மாவாகும்.


பரமாணு! பரமாத்மாவாகும்.

அந்த அணுக்களே ஆத்மாவேயாம்

கோடானு கோடி கோள்களும் சூர்ய சந்திராதிகளும் பரம அணுக்களே.

அந்த அணுக்களே ஆத்மாவேயாம்!

ஆ க வே?





பெயரும், எம்முடையதும் அல்ல. உருவமும், யாம் அல்ல. இதன் காரணம்?

அவை இயங்கக்கூடியவை. அப்படி இயங்கும் போது, செயலின் தன்மையால், குணம், பின்னிப்பிணைகிறது.

அக்குணமே கர்மாவும் புண்ணியபாவ, ஜனனமரணமாவதால் அவை, யாம், அல்ல. யாம், இயக்கமற்றவன்.

யாம்யாமாக இருக்கிறோம் என்ற ஓர் இருப்பை, மட்டும் உடையோம்.



# உ

**மின்சாரம்** அபார ஆற்றல் (சக்தி) மட்டும் உடையது. **அது** பரும்சொரும்!

வஸ்துக்கள் (பல்பு / மிக்ஸி / கிரைண்டர் / TV) **தானே** தான் இயங்கும். அவ்வியக்கத்தை வைத்து

மின்சாரம் என ஒன்றுண்டு என நம்பப்படுகிறது.

கண்ணால் காண முடியாது. **அதை**த் தொட முடியாது.

கொடுக்க முடியாது. வாங்க முடியாது.

இது உவமான வார்த்தையே. அதுக்கு இது பொருந்தாது.

ஆ ஞு பாட விளக்கமாக கொடுக்கப்பட்டது ம்

ஆகவே **ஆத்மா**வும் இயக்கத்தின் ஆதாரமானதே.

ஆனால் அது இயங்காது. சர்வசாட்சி ஆகும்.



கண்டுணரும்! 33
நிலை யாவது:-

எல்லாம் அதுவே என
காண்பதும் அதுவே நாம்
என உணர்வதுவே கண்டுணரும் நிலை
யென ஸ்ரீ மஹான்கள் கூறுவர்.

அது உண்டு! அதுவே யாம்!

யாமே அது! அதுவே எல்லாம்! அதற்கு!

அன்னியமாய் எதுவும்! எவரும்! எவனும்!
எவளும்! இல்லவே இல்லையென்ற ஓர்

அறிவின்! பாவனையை!

மட்டும் வைத்துக் கொண்டால் அதை உணர முடியும்.

அது (ஆன்மா) உண்டு என்றும்;

அதற் கன்னியமாய் நானும்! நீயும்! எல்லாமும்!
இல்லை என்ற திட உறுதி வைராக்கியமே!

அதை கண்டுணரும்! சுலபவழியாகும்.
இருப்பது ஒன்றே.
நடப்பது அதுவமே.

பாபா.



34

நீ/நாம் குழந்தை.

உன்னை

மு...டி...யு...ம்!

கண்மணிரும்/ நிலை.

காண்பதும் அதை உணர்வதும் எப்படி என
கேள்வி எழலாம்?

மனித இனம் உட்பட, நடப்பன! பறப்பன!
நீந்துவன! ஊர்வன! முதலிய 84 லட்சம்
ஜீவ/ கோடிகளையும் சிற்பங்களாக/ பொம்மைகளாக
காண வேண்டும். தாவரங்களை!
சித்திரங்களாக/ காண வேண்டும்.

கோடானு கோடி கோள்களையும், சூர்ய
சந்திராதிகளையும் மணிகை!
காண வேண்டும். குறிப்பு:- மனக்கண்ணால்
கண்டால் நாமரூப/ கற்பனையில் மனம் மயங்கும்.
பின்பயம் உண்டாகும்.



35

அறிவுக்கண்ணால்!
திட உறுதி நிச்சயத்தால்!

காண! வேண்டும். உணரல் முடியும்.
இது சத்தியம்.

மேலே! கூறிய அனைத்தும் எல்லாம்

மண்தானே? மண்ணுக்கன்னியமாய் இல்லை.

எண் திட உறுதி நிச்சயத்தால்!

உணர! வேண்டும். காண முடியாது. காண இயலாது.
உணரல் முடியும்.

மேலே கூறிய எல்லாம் யாமே! எமக்கயலாக

எதுவும் இல்லை. யாமே அது. அதுவே யாம்! என திட
உறுதி நிச்சயத்தால் உணர வேண்டும்.
[illegible] உணரல் முடியும். — சஉபாயம்.



உ குறிப்பு.

ஆத்மாவாக இருக்கப்பட்ட நாம் நான் என்னும் அஹங்கார போர்வை மூடியதால்தான் ஜீவன் என ஆனோம் என உணர்க. அந்த நான் என்னும் அஹங்காரம் எனது என்ற மமகாரம் ஆகிய இவ் விரண்டும் நாசமானலொழிய பக்தி யோகம் முக்தி யோகம் கண்டிப்பாக இல்லவே இல்லை யென்பதே வைத்தியம்.



இதுவே வேத வேதாந்த ஸ்வய அனுபவம்!

வென்றவர்களின் உறுதி வாக்கியமாகும்.

நான் ஐ | நாசம் செய்யா தவர்கள் மட்டும்

" யார்? | என விசாரணை செய்யட்டும்.

" ஐ | நாசம் செய்தவர்கள்

மட்டும்; நாம் யார்? என விசாரணை செய்யட்டும்.

என இவ்விதமதை நினைவு செய்திரும்.

இருப்பது ஒன்றே.

நடப்பது தவமே.

தி ஜெ பாபா.



அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!